[திரு. ப. பொன்னுரங்கம்] [1984 மார்ச் 6

லமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 39 இல் 'பி' மற்றும் 'சி'க்கு ஏற்ப மூலச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பிரிவு என்ன சொல்கிறது என்றால்

(*a*) that the citizens, men and women equally, have the right to an adequate means of livelihood ;

(*b*) that the ownership and control of the material resources of the community are so distributed as best to subserve the common good;

(*c*) that the operation of the economic system does not result in the concentration of wealth and means of production to the common detriment :

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்டேட்டை சார்ந்த பொது மக்களுக்கு எந்தவிதமான குந்தகமும் இல்லாதபடி வளர்ச்சிக்கு ஏற்ப இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி மாநில சர்க்கார் எதையும் எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் தம் உரையை நாளை தொடர்ந்து நிகழ்த்தலாம்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 7–3–1984 காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–30 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

108. 1982-83-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி நிறுவனத்தின் ஏழாவது ஆண்டறிக்கையும் ஆய்வுரையும் (தமிழ் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

109. 1975-76-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரிசனக் குடியிருப்பு வளர்ச்சிக் கழகத்தின் இரண்டாம் ஆண்டறிக்கையும் சிறப்பு அம்சங்களும் (தமிழ் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய நூல்கள்.

49. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும், (இரண்டாம் பட்டியல்),